*2023 ஏப்ரல் 20]* [திரு. துரைமுருகன்]

*(21–4–2023) தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்”*

*என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் ‘ஆம்’ என்க.* (ஆம்)

*மறுப்போர் ‘இல்லை’ என்க.*

*மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.*

*மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.*

*நாளை 21–4–2023, (வெள்ளிக்கிழமை) அன்று வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.*

*பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (21–4–2023), வெள்ளிக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.*

*பின்னர், பேரவை பிற்பகல் 5–03 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*114. அறநிறுவனங்களின் சொத்துக்களை நிர்வகித்தல் மற்றும் பாதுகாத்தல் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி4–2) துறையின் 28–2–2023 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 88–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*115. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் அறுபத்து நான்காவது ஆண்டறிக்கை. [1962 ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்கு நிறுவனச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31(11) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*[2023 ஏப்ரல் 20*

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*322. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்புர அடிப்படை வசதி மேம்பாடு மற்றும் புதுப்பிப்பு நிதியத்தின் பதினைந்தாவது ஆண்டறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*323. மானியக் கோரிக்கை எண் 22–காவல் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*324. மானியக் கோரிக்கை எண் 23–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*325. சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின்* 'Tamil Nadu–Where Stories Never End' *என்கிற சிறுநூல். (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*326. சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (கலை மற்றும் பண்பாடு, அருங்காட்சியகங்கள் மற்றும் தொல்லியல்) (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)*

*327. சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா) (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)*

*328. இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)*

*2023 ஏப்ரல் 20*]

*329.* திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நிதித் துறை, மனித வள மேலாண்மைத் துறை மற்றும் ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2023–2024.* (தமிழ்)

*330.* பொது (மறுவாழ்வு)த் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2023–2024.* (தமிழ்)

———

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS